யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, யூன்- 2015
## Term Examination, June - 2015

| இலங்கை வரலாறு | புள்ளித்திட்டம் | தரம் :- 13 (2015) |
|---|---|---|

### பகுதி - I

| | | | | |
|---|---|---|---|---|
| 1) 2 | 9) 1 | 17) 3 | 25) 4 | 33) 3 |
| 2) 5 | 10) 4 | 18) 2 | 26) 4 | 34) 5 |
| 3) 3 | 11) 2 | 19) 4 | 27) 5 | 35) 2 |
| 4) 4 | 12) 4 | 20) 1 | 28) 5 | 36) 4 |
| 5) 3 | 13) 3 | 21) 2 | 29) 3 | 37) 1 |
| 6) 4 | 14) 1 | 22) 3 | 30) 2 | 38) 3 |
| 7) 5 | 15) 5 | 23) 3 | 31) 1 | 39) 2 |
| 8) 2 | 16) 4 | 24) 3 | 32) 4 | 40) 5 |

### பகுதி - II

1) இலங்கைப் படத்தில் ....

2) 1. மகாநாமதேரர்
கி.பி 5ம் நூற்றாண்டின் பிற்பகுதி / கி.பி. 6ம் நூற்றாண்டின் முற்பகுதி

2. ⅄ ஆரியக் குடியிருப்புக்கள் பற்றி பிராமிக் கல்வெட்டுக்கள் உறுதி செய்கின்றன.
   - சிற்றரசர்கள் பிரதேச ஆட்சியாளர்கள், அமைச்சர்கள், நிர்வாக நடவடிக்கைகள் என்பன பற்றி மகாவம்சத்தில் கூறப்பட்டுள்ள செய்திகள் பரம்பரகல, குசேலன்கந்த, யடஹலன, கந்துருவெவ, ஹென்னன்னேகல போன்ற இடங்களிலுள்ள கல்வெட்டுக்கள் உறுதிசெய்கின்றன.
   - மத்திய நிர்வாகத்துடன் தொடர்புடைய அரசர்களின், அதிகாரிகளின் சிறப்புப் பெயர்கள் கல்வெட்டுக்கள் மூலம் உறுதிசெய்யப்படுகின்றன.
   - நீர்ப்பாசன விதிமுறைகள் பற்றி கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

3. ⅄ ஏற்கனவே பேணப்பட்டு வந்த மரபுகளைத் தழுவி எழுதப்பட்டதால் சில முக்கிய விடயங்களைப் பெறமுடியாதுள்ளது.
   - ஆசிரியரின் சொந்த விருப்பங்கள், கருத்துக்கள் செல்வாக்குச் செலுத்துவதால் நடுவுநிலை பாதித்துள்ளது
   - தேவநம்பியதீசனுக்கு முற்பட்டகால வரலாறு கற்பனைக் கதைகள் மூலம் கூறப்பட்டுள்ளதால் அதன் நம்பகத்தன்மை பற்றிய பிரச்சினை
   - ஆசிரியர் வாழ்ந்த காலத்திற்கு மிக முற்பட்ட காலச் செய்திகள் இடம்பெறுதல்
   - ஏனைய மூலாதாரங்களில் கூறப்பட்டுள்ள பல முக்கிய விடயங்கள் மகாவம்சத்தில் குறிப்பிடப்படாமை
   - அனுராதபுரகால நாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்த அரசுகள் பற்றிய தகவல்கள் சரியாகக் குறிப்பிடப்படாமை

3) அனுராதபுர காலம் :- வரையறை விவசாயத்தில் நீர்ப்பாசன முறைமை அவசியம்

- ஆரம்பகால நீர்ப்பாசனச் செயற்பாடுகள்
- குளங்கள், கால்வாய்களின் தோற்றம், விருத்தி
- அரச ஆதரவு
  - ☞ பண்டுகாபயன் - அபயவாவி, ஜயவாவி, காமினிவாவி
  - ☞ தேவநம்பியதீசன் - திஸாவாவி, வலஸ்வாவி
  - ☞ துட்டகாமினி – காமினிவாவி, சொரபொரவாவி

- ☞ சத்தாதீசன் - 18 சிறிய குளங்கள்
- ☞ வசபன் - எருவாவி, மகாவிலாச்சி, மானாகெட்டிய உட்பட 11 குளங்களும், எலஹர, சுரங்கக்கால்வாய் உட்பட 12 கால்வாயும்
- ☞ மகாசேனன் - மின்னேரி, கவுடுல்ல, குருளு, மகாகணதர உட்பட 16 குளங்கள், பப்பதந்தக் கால்வாய்
- ☞ தாதுசேனன் - கலாவாவி, மாததுகம, மெத்தக்குட்டிய, யோதவாவி உட்பட 18 குளம், ஜயகங்கை கால்வாய்
- ☞ 2ம் முகலன் - பதவியா, நாச்சதுவ குளங்கள்
- ☞ 1ம் அக்போ - ஸ்ரீ வட்டமானகவாவி, குருந்துவாவி, மாமடுவவாவி மினிப்பே கால்வாய்
- ☞ 2ம் அக்போ – கந்தளாய் - கிரிதலைக்குளங்கள், ஹந்தோட்டை அணை
- ☞ நீரப்பாசனத் தொழிநுட்பம்
- ☞ அனுராதபுரகால நீர்ப்பாசனத்தின் தேய்வுக்கான காரணங்கள்

**4)**
1. தந்தை – மொகலாளன், தாய் - லோகிதா
2. ரவிதேவ, சல
3. 1. ஆதிமலையன் / அதியமலையன் கலகம் 1074
   2. கேசதாது காசியப்பனின் இரு சகோதர்களால் மேற்கொள்ளப்பட்ட கலகம் - 1076 – 1077
   3. வேளைக்காரர் கலகம் - 1086
4. அரசியல் -
   - ☞ உருகுறையின் அரசுரிமையைப் பெறல் - 1055 லோகேஸ்வரன் கேசதாது காசியப்பன் முதலியோரை வெற்றி
   - ☞ சோழருக்கு எதிரான நடவடிக்கைகள்
   - ☞ 1073ல் சோழரைவெளியேற்றல்
   - ☞ சோழரை எதிர்த்த அரசுகளோடு நல்லுறவுகள்
   - ☞ உள்நாட்டுக் கலகங்களை அடக்குதல்
   - ☞ நாட்டை ஒன்றிணைத்து 40 வருடங்கள் வரை ஆட்சி செய்தமை

   பொருளாதாரம் - பர்மா, கம்போடியா, வர்த்தக உறவு, குளங்கள், கால்வாய்கள், புனரமைப்பு பத்தகுணவாவியை அமைத்தல்
   சமயம் - சமய ஒற்றுமையை ஏற்படுத்த முயற்சித்தமை பர்மாவிலிருந்து பிக்குமாரை வரவழைத்து உபசம்பதா விழா நடாத்தியமை
   முப்பெரும் மதப்பிரிவுகளுக்கும் அரச ஆதரவு வழங்கல்
   சிவனொளிபாத மலைக்கு விசேட கவனமும், புனரமைப்புப் பணிகளும்

**5)**
- ⅄ 1ம் பராக்கிரமபாகுவின் தூரநோக்கற்ற செயற்பாடுகள்
- ⅄ பராக்கிரமபாகுவிற்குப்பின் நாட்டின் அரசியல் நிலை மோசமடைதல்
- ⅄ மத்திய அரசு பலவீனமடைதல்
- ⅄ கலிங்க – பாண்டிய அரசுகள் இலங்கையின் அரசுரிமைக்காகப் போட்டியிட்டமை
- ⅄ நிதிநெருக்கடிகள்
- ⅄ கொடிய நோய்களின் தாக்கம்
- ⅄ கடுமையான வரிவிதிப்புக்கள்
- ⅄ கலிங்கமாகனின் படையெடுப்பும், அவனது கடுமையான நடவடிக்கைகளும்
- ⅄ தம்பதெனியா இலங்கையின் தலைநகராக்கப்பட்டமை

**6)**
1. 3ம் விஜயபாகு / வன்னிராஜா / வத்கிமிவிஜயபாகு
2. விசுத்திமார்க்க மகாசன்னய, வனவினிஸ சன்னய, கவிசிலுமின
3. தர்மசேனதேரர், புத்தபுத்திரதேரர் (மயூரபாததேரர்) வத்தாவே தேரர்
4. அரசியல் - கலிங்கமாகனையும், சந்திரபானுவின் இருபடையெடுப்புகளையும் முறியடித்தமை
   - ⅄ நாட்டின் அமைதியை ஏற்படுத்தியமை
   - ⅄ பாண்டியருடன் நட்புறவைப் பேணியமை
   - ⅄ 35 ஆண்டுகளுக்கு மேல் உறுதியான ஆட்சியை மேற்கொண்டமை

   பொருளாதாரம் -
   - ⅄ இராஜரட்டையில் குளங்கள் - கால்வாய்களை புனரமைத்தமை
   - ⅄ கறுவா வர்த்தகத்தை ஊக்குவித்தமை
   - ⅄ முதன்முதலில் தென்னைச் செய்கைக்கு அரச ஆதரவு வழங்கியமை

   பண்பாடு :-
   - ⅄ பௌத்த சங்கத்தில் சீர்திருத்தம்
   - ⅄ ‘தம்பதெனியக் கதிகாவத’ எழுதுவித்தமை
   - ⅄ உபசம்பதாச் சடங்குகள் வருடாந்தம் நடத்தியமை
   - ⅄ கல்விக்கும், இலக்கியத்திற்கும் புத்துயிரளித்தமை

7) 1. ஆரியச் சக்கரவர்த்தி மன்னர்கள்

- கி.பி 14ம் நூற்றாண்டு – 17ம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை வட இலங்கையில் காணப்பட்ட யாழ்ப்பாண இராச்சியத்தை ஆட்சிசெய்த மன்னர்களே ஆரியச் சக்கரவர்த்திகள் ஆவர்.
- இவர்கள் பற்றிய செய்திகளை யாழ்ப்பாண வைபவமாலை, செகராஜசேகரமாலை போன்றன தருகின்றன.
- இவர்களின் தலைநகரம் நல்லூராகும்
- விஜய கூழங்கைச் சக்கரவர்த்தி, குலசேகர சிங்கையாரியன், விக்கிரம சிங்கையாரியன் வரோதய சிங்கையாரியன், மார்த்தாண்ட சிங்கையாரியன், குணபூஷண சிங்கையாரியன், விரோதய சிங்கையாரியன், ஜயவீரசிங்கையாரியன், குணவீரசிங்கையாரியன், கனகசூரிய சிங்கையாரியன், பரராஜசேகரன், சங்கிலி ஆகிய 12 மன்னர்கள் யாழ்ப்பாண இராச்சியத்தை ஆட்சி செய்துள்ளனர்.
- 14ம் 15ம் நூற்றாண்டுகளில் யாழ்ப்பாண இராச்சியம் மிகப் பலங்கொண்டதாக விளங்குவதற்கு ஆரியச் சக்கர வர்த்திகளே காரணமாகும்.

2. சர்வஜன வாக்குரிமை

- எந்தவித அடிப்படைத் தகுதிகளுமின்றி 21 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் வழங்கப்பட்ட வாக்குரிமையே சர்வஜன வாக்குரிமையாகும்.
- 1931ம் ஆண்டு டொனமூர் சீர்திருத்தத்தின் மூலம் இலங்கை சர்வஜன வாக்குரிமையைப் பெற்றுக்கொண்டது
- பிரித்தானியாவில் கூட 1928ம் ஆண்டிலேயே இவ்வாக்குரிமை வழங்கப்பட்ட நிலையில் இலங்கையும் மிக விரைவில் பெற்றுக்கொண்டமை சிறப்புக்குரியதாகும்.
- சமகால இலங்கையின் அரசியற் தலைவர்கள் வரையறுக்கப்பட்ட வாக்குரிமையே வேண்டுமெனக் கேட்டுக்கொண்டமையால் சர்வஜனவாக்குரிமை வழங்கப்படுவதை ஆதரிக்கவில்லை
- தொழிற்கட்சித் தலைவரான A.E குணசிங்க மட்டுமே சர்வஜன வாக்குரிமையை முதன்முதலில் ஆதரித்தார்.
- இலங்கையில் ஜனநாயக ஆட்சிமுறையின் வளர்ச்சியில் சர்வஜன வாக்குரிமையானது மிக முக்கியமான அம்சமாகும்

3. போர்த்துக்கேயரின் கண்டி மீதான படையெடுப்புக்கள்

- 1505ம் ஆண்டு எதிர்பாராத விதமாக போர்த்துக்கேயர் இலங்கையின் காலித்துறைமுகத்தில் வந்திறங்கினார்.
- முதலில் போர்த்துக்கேயர் கோட்டையிலும், அதன் பின்னர் யாழ்ப்பாண அரசிலும் ஆதிக்கத்தை நிலைநாட்டிக்கொண்ட போர்த்துக்கேயர் தமது நவீன இராணுவ பலத்தினால் மலைநாட்டையும் கைப்பற்றலாம் என எண்ணினர்.
- எனவே கண்யைக் கைப்பற்றுவதற்கு 1594 – 1638 வரை நான்கு தடவைகள் படையெடுத்தனர்.
- 1594 தந்துரே, 1602 பலன, 1630 ரந்தனிவெல, 1638 கண்ணொருவ ஆகிய போர்களை மேற்கொண்டும் கடைசி வரை வெற்றிபெற முடியவில்லை
- மலையகத்தின் இயற்கை அரண்கள், மன்னார்களின் திறமை மக்களின் அரச விசுவாசம், கொரில்லாப் போர்முறையை சுதேச வீரர்கள் கடைப்பிடித்தமை, மலையகம் பற்றிய பூரண அறிவு இல்லாமை, காலநிலை அடிக்கடி மாற்றமடைந்தமை போன்ற காரணங்களால் போர்த்துக்கேயர் கண்டிமீது மேற்கொண்ட அனைத்துப் படையெடுப்புக்களிலும் படுதோல்லியடைந்தனர்.

4. இலங்கையின் அமைவிட முக்கியத்துவம்

- இலங்கையானது இந்து சமுத்திரத்தின் மத்தியில், இந்தியாவிற்கு மிக அண்மையில், அதன் தென்கிழக்குத் திசையில், மிகச்சிறிய நீர்ப்பரப்பால் பிரிந்து காணப்படும். மிகச்சிறிய தீவாகும்.
- இந்தியாவிற்கு மிக அண்மையில் அமைந்துள்ள போதும் அந்நாட்டிலிருந்து நீரால் பிரிக்கப்பட்டு தனித்துக் காணப்படுவது அதற்கேயுரிய சிறப்பம்சமாகும்.
- கீழைத்தேச – மேலைத்தேச வர்த்தகப் பாதையின் கேந்திர நிலையத்தில் அமைந்துள்ளது.
- இந்தியாவின் கரையோரங்களை கண்காணிக்கக் கூடிய நிலையத்தில் அமைந்துள்ளது.
- இயற்கையான பல துறைமுகங்கள் காணப்படுகின்றது
- மிதமான அயனமண்டல பருவக்காற்றுக் காலநிலை செல்வாக்குச் செலுத்துகின்றது.

3. கண்டி உடன்படிக்கை

- இலங்கையின் இறுதிச் சுதந்திர அரசான கண்டியைப் பிரித்தானியர் 1815 மார்ச் 01 இல் கைப்பற்றிய பின் இடம்பெற்றது.
- அவ்வரசின் இறுதி மன்னனான ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கனைக் கைதுசெய்து நாடு கடத்தியபின் வெற்றி பெற்ற இரு பிரிவினர்களுமான சிங்களப் பிரதானிகளுக்கும் - பிரித்தானிய அரச நிர்வாகிகளுக்குமிடையே இடம்பெற்றது.
- 1815 மார்ச் 02 – மார்ச் - 18 வரை இது இடம்பெற்றது
- பிரித்தானியப் பேரரசன் 3ம் ஜோர்ச் சார்பாக ஆளுநர் நொபேட் பிறவுன்றிக் கையொப்பமிட்டார்
- கண்டி மன்னன் சார்பாக பிரதம பிரதானியான எஹலப்பொலவின் கையெழுத்துடன் நிறைவடைந்தது
- எகலப்பொல, மொல்லிக்கொட, 2ம் பிலிமத்தலாவ, ஹெப்பற்றிப்பொல உட்பட பல சிங்களப் பிரதானிகள் இதில் ஒப்பமிட்டனர்.
- இவ்வுடன்படிக்கையில் சுதேச பழக்கவழக்கங்கள், சமயம், சட்டதிட்டங்கள் உட்பட்ட 12 வாசகங்கள் இடம்பெற்றன.
- அவற்றை செயற்படுத்தாமையே 1818ம் ஆண்டு சுதந்திரப் போருக்கான அடிப்படைக் காரணமாகும்.

**8)** 1. 1521ல் ஆரம்பம்

- 1524ல் முஸ்லிம்கள் கோட்டையிலிருந்து வெளியேறி சீதாவாக்கையில் தஞ்சமடைதல்
- 1538ல் றைகம இணைக்கப்படல்
- 1557ல் கோட்டையிலிருந்து பௌத்த புனிதச் சின்னங்கள் சீதாவாக்கைக்கு எடுத்துவரப்படல்
- 1562 முல்லேரியாப்போர் - கோட்டையின் சிலபகுதிகள் சிதாவாக்கையுடன் இணைக்கப்படல்
- 1582ல் கண்டி கைப்பற்றப்படல்
- 1580களில் இலங்கையிலிருந்த மிகப் பலங்கொண்ட பரந்த இராச்சியமாக சீதாவாக்கை விளங்கியது.

2. வீழ்ச்சிக்கான காரணங்கள்

- மாயாதுன்னையின் இறப்பு (மரணம்)
- ராஜசிங்கனின் அடிக்கடி கோபப்படும் தன்மை
- தந்தையைக் கொலை செய்த பாவச்செயலுக்கு பிராயச்சித்தம் தேடி இந்துமதத்தை ராஜசிங்கன் தழுவியமையால் சிங்கள மக்களின் ஆதரவை இழந்தமை
- சந்தேக நோக்குடன் வாழ்ந்த இராஜசிங்கன் எவரையும் எளிதில் நம்பாது தன் உறவினர்களையும் பகைத்துக்கொண்டமை
- 1ம் விமலதர்ம சூரியனின் எழுச்சி
- கனேதன்ன போரில் தோல்வியடைதல்
- மூங்கில் முள் (பெதன்கொட சோலையில்) குத்தியதால் ஏற்பட்ட விசத்தின் காரணமாக 1ம் ராஜசிங்கன் இளம்வயதில் இறந்தமை
- 1ம் ராஜசிங்கனுக்குப் பின் ஆட்சி செய்வதற்கு வாரிசு இல்லாமை
- கோட்டை மன்னனுக்கு போர்த்துக்கேயரின் உதவி கிடைத்தமை

**9)**

- இருசபை கொண்ட பாராளுமன்றம்
- பிரதமர் தலைமையிலான அமைச்சரவை
- பெயரளவிலான மகாதேசாதிபதி
- பொதுச்சேவை ஆணைக்குழு
- நீதிச்சேவை ஆணைக்குழு
- அரசப் பொது நிதி
- சிறுபான்மையினரின் உரிமைகள் தொடர்பான உபவிதி
- இவை தற்போது பெற்றுள்ள வளர்ச்சிகள், மாற்றங்கள் குறிப்பிடப்பட்டு விளக்கப்பட்டிருத்தல் வேண்டும்.